## செப்டம்பர் 2020 பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு
## சேவை மையங்களுக்கான அறிவுரைகள்

செப்டம்பர் 2020 பத்தாம் வகுப்பு துணைத் தேர்விற்கு Service Centre-களில் தனித்தேர்வர்கள் ஆன்லைனில் பதிவு செய்யும் போது தகுதியான தனித்தேர்வர்களை அனுமதிப்பதற்கான அறிவுரைகள்

1. தனித்தேர்வர் விவரங்களை ஆன்–லைனில் பதிவு செய்த பின்னர், "Confirmation Copy" எனப்படும் விண்ணப்பமும் Registration slip என்ற ஆவணமும் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2. ஆன்–லைனில் பதிவு செய்த "Confirmation Copy" எனக் குறிப்பிட்ட விண்ணப்பத்தோடு Registration slip மற்றும் உரிய இணைப்புகளையும் இணைத்துப் பெற வேண்டும்.

3. ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்ற தனித்தேர்வர்கள் விண்ணப்பிக்கும்போது அத்தேர்வர்களின் மதிப்பெண் சான்றிதழின் நகலினை ஆய்வு செய்து தோல்வியுற்ற பாடத்திற்கு மட்டும் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேலும், தேர்வருக்கு வழங்கப்படும் "Candidate Copy"–ல் கையொப்பம் பெறும் முன்னர் தேர்வரை விண்ணப்பித்த பாடம் / பாடங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள அறிவுறுத்தல் வேண்டும்.

4. "Confirmation Copy"–யின் மேல் வலதுப்புறத்தில் உரிய தனித்தேர்வரின் ஸ்கேன் செய்யப்பட்ட புகைப்படம் இடம் பெற்றிருக்கும்.

5. விண்ணப்பத்தின் கீழ் தனித்தேர்வர் உரிய இடத்தில் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

6. S வகை தனித்தேர்வர்கள் மற்றும் SP வகை நேரடித் தனித்தேர்வர்கள் இணைக்க வேண்டிய ஆவணங்களின் விவரம், இவ்வலுவலக அறிவிக்கை மற்றும் "Confirmation Copy"–ல் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதனை சரிபார்க்க வேண்டும்.

7. மார்ச் 2016 முதல் தேர்வெழுதி நிரந்தரப் பதிவெண் (Permanent Register Number) கொண்டுள்ள தேர்வர்களுக்கு, விண்ணப்பிக்கும்போது அத்தேர்வர்களுக்கான நிரந்தரப் பதிவெண்ணை கொண்டு விண்ணப்பிக்க வேண்டும்.

8. **மேற்படி தேர்விற்கு விண்ணப்பிக்க வருகை புரியும் தனித்தேர்வர்கள் கட்டாயம் அறிவியல் பாட செய்முறை பயிற்சி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். அறிவியல் பாட கருத்தியல் தேர்வெழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் ஏற்கனவே செய்முறைப் பயிற்சி பெற்றதற்கான அத்தாட்சியை தலைமையாசிரியரிடமிருந்து பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.**

2...

9. <u>அறிவியல் பாடத்தை பொருத்தவரை கருத்தியல்/செய்முறை என்ற இரு பகுதிகளில் எந்த பகுதியில் தோல்வியடைந்தாலும் தோல்வி அடைந்த பகுதிக்கு மட்டும் தேர்வெழுத விண்ணப்பிக்கவேண்டும். அறிவியல் பாட செய்முறைத் தேர்விற்கு மட்டும் தேர்வெழுத விண்ணப்பிக்கும்போது ஏனைய பாடங்களுக்கு உள்ள கட்டணத்தொகை போன்று ரூ.175/– ஐ (தேர்வுக்கட்டணம் 125/– + ஆன்–லைன் கட்டணம் ரூ.50/–) கட்டணமாக பெறவேண்டும்.</u>

10. தேர்வுக் கட்டணத்தினைப் பணமாக செலுத்த தனித்தேர்வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தனித்தேர்வர்கள் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணத் தொகை Registration Slip-ல் குறிப்பிடப்பட்டிருக்கும். தனித்தேர்வரின் விண்ணப்பத்தினை ஆய்வு செய்து, தகுதியினை உறுதி செய்த பின்னர் தேர்வுக் கட்டணத்தை பணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். தகுதியில்லா நிகழ்வுகளில் உரிய காரணத்தை தெரிவித்து தனித்தேர்வரின் விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும்.

11. Registration Slip ல் இரண்டு பாகங்கள் உள்ளது. முதல் பாகம் Department copy எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். இரண்டாம் பாகம் **candidate copy** எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். தனித்தேர்வர்களிடமிருந்து தேர்வுக் கட்டணத் தொகையினை பெற்றபின்னர், விண்ணப்பத்தினை ஆய்வு செய்த பணியாளர் **Fees paid** எனக் குறிப்பிட்டு சுருக்கொப்பமிட வேண்டும். இப்படிவத்தில் தனித்தேர்வரும் கையொப்பமிட்டிருக்க வேண்டும் **candidate copy** யினை கிழித்து பள்ளி முத்திரையிட்டு தனித்தேர்வருக்கு வழங்க வேண்டும்.

## 12. <u>S வகையினர் (ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்றவர்கள்) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியவை</u>

- ஏற்கனவே எஸ்.எஸ்.எல்.சி தேர்வெழுதி தேர்ச்சிப் பெற்ற பாடங்களின் மதிப்பெண் சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட நகல்
- அறிவியல் பாடத் தேர்வுக்கு விண்ணப்பிப்பவர்கள் அறிவியல் செய்முறைப் பயிற்சி முடித்ததற்கான அத்தாட்சி சான்றிதழை பள்ளித் தலைமையாசியரிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும்.

**13. SP வகையினர் (நேரடித் தனிதேர்வர்கள்) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியவை**

- எட்டாம் வகுப்பு தேர்ச்சி/ஒன்பதாம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்பு படித்தமைக்கான அசல் மாற்றுச் சான்றிதழ்.
- அறிவியல் பாடத்தில் அறிவியல் செய்முறைப் பயிற்சி ஏற்கனவே முடித்ததற்கான அத்தாட்சி சான்றிதழை பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும்.
- மெட்ரிக் /ஆங்கிலோ இந்தியன் தேர்வெழுதி தோல்வியுற்ற தேர்வர்கள் அன்னாரின் அனைத்து அசல் மதிப்பெண் சான்றிதழ்களை அரசுத் தேர்வுகள் சேவை மையங்களில் ஒப்படைத்தல் வேண்டும்.

**14. மாற்றுத் திறனாளிகள்**

**பார்வையற்றோர் மற்றும் காது கேளாதோருக்கு மேற்குறிப்பிட்ட தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.**

தேர்வர்கள், தேர்வெழுதும் போது சொல்வதை எழுதுபவர், கூடுதல் ஒரு மணி நேரம் போன்ற சலுகைகளை பெற விரும்பினால் உரிய மருத்துவச் சான்றிதழ்களை இணைத்து தனியே ஒரு சலுகை கோரும் கடிதத்தை தமது விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். மேற்படி மாற்று திறனாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்த விவரத்தினை **www.dge.tn.gov.in** இணையதளம் மூலம் விரிவாகத் தெரிந்துக் கொள்ளலாம்.

**15. பொதுவான அறிவுரைகள்:-**

- **தேர்வர்கள் பொதுத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க தாங்கள் பயின்ற பள்ளிகள் / தனித்தேர்வு மையங்கள் / சேவை மையங்களுக்கு வரும் பொழுது கட்டாயம் முகக்கவசம் அணிந்து வரவேண்டும்.**
- **போதிய சமூக இடைவெளி கடைபிடிக்க வேண்டும்.**
- **கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக அரசால் வெளியிடப்பட்டுள்ள அனைத்து வழிகாட்டி நெறிமுறைகள், நிலையான செயல்பாட்டு வழிமுறைகள் (SOP) தவறாமல் பின்பற்றப்பட வேண்டும்.**

**ஒம்./—**
**இயக்குநர்**

**நாள். 19.08.2020.**
**இடம். சென்னை—6.**